**களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) - 2022**

---

களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பி 117 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அமுலாக்கல் முகவராகவுள்ளது. களு கங்கை நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்கல் மற்றும் நீர் விநியோக வலையமைப்புக்களை மறுசீரமைத்தல் ஊடாக மேற்கு மாகாணத்தின் தென் பகுதிக்கு பாதுகாப்பான நீரினை வழங்கி நீர் விநியோக வினைத்திறனை அதிகரித்தல், அதன் ஊடாக மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகளானது உள்ளீர்ப்பு மற்றும் நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல், பரிமாற்ற பிரதானிகள் மற்றும் விநியோக பிரதானிகளை வழங்கி அமைத்தல், தரை நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேற்று நிலையங்களை நிர்மாணித்தல், மில்லனியாவிற்கு இரண்டாம் நிலை விநியோகத்தை வழங்கி அமைத்தல், விநியோக ஊட்டி பிரதானிகள் (feeder mains) மற்றும் இரண்டாம் நிலை பிரதானிகளின் மிகுதிப் பகுதியை வழங்கி அமைத்தல் மற்றும் DMA உபகரணங்களை வழங்கி நிறுவுதல் எனும் பெயரிலான 05 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,349 மில்லியனிற்கு சமனான யப்பான் யென் 39,069 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 45,067 மில்லியனிற்கு சமனான யப்பான் யென் 31,810 மில்லியன் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மே 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 07 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக, ரூபா 12 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியான முப்பத்து மூன்று கணனிகள், 260 தளபாட மற்றும் அலுவலக உபகரண உருப்படிகள் மற்றும் 08 வளிப்பதனாக்கிகள் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டது. | செயற்திட்டத்தில் உள்ள அனைத்து சொத்துக்களுக்கான பொருளிருப்புக்கள் பராமரிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து சொத்துக்களும் மூலதனமாக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | LKAS 21 இன் 23(அ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் இறுதியிலும் வெளிநாட்டு நாணய உருப்படிகள் இறுதி விலைவிகிதத்தைப் பயன்படுத்தி நாணயமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் ஆண்டு இறுதிக் கடன் மீதியானது இறுதி விலைவிகிதத்துடன் சீர்செய்யாப்படாததன் காரணமாக ரூபா 75.6 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அது சீர்செய்யப்படும். | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டம் தொடங்கியதில் இருந்து எந்தவொரு கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. | சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| இல. | செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தம். | (i) இந்த செயற்திட்டத்திற்கான கடன் உடன்படிக்கை 2017 யூலை 07 இல் கைச்சாத்திடப்பட்டதுடன் அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் ஆலோசனை சேவைகள் ஒப்பந்தம் 2018 மே 01 இல் தொடங்கப்பட வேண்டும், எனினும் அது 2020 யூலை மாதத்தில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் தனிமைப்படுத்தல் காரணமாக ஒப்பந்தத்தை கைச்சாத்திடுதல் தாமதமாகியது. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறைமையை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2025 ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் இறுதிப் பணவளிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதிக் காலப்பகுதி 32 மாதங்கள் மாத்திரமேயாகும். எனவே இந்த செயற்திட்டக் கூறுகளை திட்டமிட்டவாறு பூர்த்தி செய்வதற்கு அதிக ஆபத்து காணப்பட்டது. | இலங்கையில் நிலவும் சூழ்நிலை காரணமாக 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை JICA தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | செயற்திட்ட நோக்கங்களை தாமதமின்றி அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (iii) ஆரம்ப அமுல்ப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம், 2020 யூனில் தொடங்கப்பட்டு 2023 செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிர்மாணப் பணிகள் 2022 திசெம்பர் 31 வரையிலும் நிர்மாணத்திற்கு முந்தைய கட்டத்திலேயே இருந்தன. | தற்போது JICA 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | கடன் வழங்கும் முகவர் அல்லது மாற்று வளமூலத்திலிருந்து நிதிகளைப் பெற்று செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொதி 1 – உள்ளீர்ப்பு மற்றும் நீர் சுத்திகரிப்பு ஆலையின் | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் இந்தக் கூறின் பட்டியலிடப்பட்ட நிர்மாணப் பணிகள் 2020 யூனில் தொடங்கப்பட்டு 2023 | தற்போது JICA 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | வேறு ஏதேனும் வளமூலத்திலிருந்து நிதிகளைப் பெற்று செயற்திட்டப் பணிகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்மாணம் | செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரையிலும் செயன்முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. | | விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பொதி 2 - பரிமாற்ற பிரதானிகள் மற்றும் விநியோக பிரதானிகளை வழங்கி அமைத்தல் | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் இந்தக் கூறின் நிர்மாணப் பணிகள் 2020 யூனில் தொடங்கப்பட்டு 2023 செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் பொறியியலாளர் மதிப்பீட்டினை அங்கீகரித்த பின்னர் செயன்முன்னேற்றங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. | தற்போது JICA 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | வேறு ஏதேனும் வளமூலத்திலிருந்து நிதிகளைப் பெற்று செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொதி 3 - தரை நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேற்று நிலையங்களை நிர்மாணித்தல் | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் இந்தக் கூறின் நிர்மாணப் பணிகள் 2023 செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்திற்கு முந்தைய நிலையிலேயே இருந்ததுடன் BOQs ஆனது PMU இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிப்பில் உள்ளது. | தற்போது JICA 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | வேறு ஏதேனும் வளமூலத்திலிருந்து நிதிகளைப் பெற்று செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பொதி 4 - மில்லனியாவுக்கான இரண்டாம் நிலை விநியோகத்தை வழங்கி அமைத்தல் | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் இந்தப் பகுதியின் நிர்மாணப் பணிகள் 2023 செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்திற்கு முந்தைய நிலையிலேயே இருந்தது. | தற்போது JICA 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | செயற்திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | பொதி 5 - விநியோக ஊட்டி பிரதானிகள் மற்றும் இரண்டாம் நிலை பிரதானிகளின் மிகுதிப் பகுதியை வழங்கி அமைத்தல் மற்றும் DMA உபகரணங்களை வழங்கி நிறுவுதல் | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் இந்தப் பகுதியின் நிர்மாணப் பணிகள் 2023 செப்தெம்பரில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்திற்கு முந்தைய கட்டத்திலேயே இருந்தது. | தற்போது JICA 2022 ஏப்ரல் முதல் கடன் பணவளிப்புக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | காலதாமதமின்றி செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்த நிபந்தனைகள் 6.5(உ) இன் பிரகாரம் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு 56 நாட்களுக்குள் விலைப்பட்டியலுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆலோசனை ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 294 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல்கள் 2022 திசெம்பர் 31 அளவில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ் விலைப்பட்டியல்கள் 102-321 நாட்களாக நிலுவையாக இருந்தது. மேலும் விசேட ஒப்பந்த நிபந்தனைகள் 6.6 இன் பிரகாரம் ஒரு சதவீத தாமதக் கொடுப்பனவுக் கட்டணங்களை செலுத்தும் அபாயம் இருப்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக 2022 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும் வகையில் கடன் பணவளிப்புக்களை JICA தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. 2021 நவம்பர் மாத விலைப்பட்டியலிற்கு JICA 2022 பெப்ரவரியில் கடைசியாகப் பணவளிப்பை மேற்கொண்டது. 2021 திசெம்பரில் இருந்து அனைத்து IPC மீதிகளும் இன்னும் நிலுவையாக உள்ளன. | நிலுவையாக உள்ள விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூர் ஆலோசகருக்கு ரூபா 83.6 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 50.2 மில்லியன் தொகையான நிலுவை மீதி ஒப்பந்ததாரரிடம் இருந்தது. ஒப்பந்ததாரருக்கு ஒரே நாளில் செலுத்தப்பட வேண்டிய விலைப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 99 மில்லியனாகும். மேற்படி முன்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கான ஏற்பாடில்லாமல் 2022 திசெம்பர் 31 முதல் ஒப்பந்ததாரரை தற்காலிகமாக இடைந்றுத்துவதற்கு செயற்திட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக 2022 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும் வகையில் கடன் பணவளிப்புக்களை JICA தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. நிலுவையாக உள்ள விலைப்பட்டியல் கொடுப்பனவில் இருந்து மீதமுள்ள முற்பணத்தைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஒப்பந்ததாரரின் அக்கறைகளை செயற்திட்டம் கோரியது. | முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |